செய்தி வெளியீடு எண். 77-2019 நாள்: 29.09.2019

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதியில் நடைபெறவுள்ள இடைத்தேர்தலை முன்னிட்டு விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட தேர்தல் வாக்குச்சாவடி மையங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப. அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

*****

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதியில் நடைபெறவுள்ள இடைத்தேர்தலை முன்னிட்டு, விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட தேர்தல் வாக்குச்சாவடி மையங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (29.09.2019) பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது.

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதியில் நடைபெறவுள்ள இடைத்தேர்தலை முன்னிட்டு, பல்வேறு முன்னேற்பாடு பணிகள் நடைபெற்று வருகிறது. அதன் தொடர்ச்சியாக, இன்றைய தினம் விக்கிரவாண்டி தொகுதியில் உள்ள தேர்தல் வாக்குச்சாவடி மையங்களான விக்கிரவாண்டி அரசு மேல்நிலைப்பள்ளி, அரசினர் மகளிர் உயர்நிலைப்பள்ளி ஆகிய வாக்குச்சாவடிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் தேர்தல் பராமரிப்புப் பணிகளையும், அடிப்படை வசதிகளான, மின்வசதி, குடிநீர் வசதி மற்றும் அமைக்கப்படவுள்ள வாக்குச்சாவடி முகவர்களுக்காக இருக்கை வசதிகள், பாதுகாப்பு தடுப்புக் கட்டைகள், நாற்காலிகள், மாற்றுத்திறனாளிகள் எளிதில் சென்று வாக்கு அளிப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள சாய்தளங்கள் போன்ற முன்னேற்பாடு பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது. மாவட்டம் முழுவதும் 39 பறக்கும்படையும், விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதியில் மட்டும் 3 பறக்கும்படையும், 3 நிலையான கண்காணிப்புக்குழுவும் அமைக்கப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது விழுப்புரம் வருவாய் கோட்டாட்சியர் திரு.ராஜேந்திரன், விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் திரு.மு.சந்திரசேகர், விக்கிரவாண்டி பேரூராட்சி செயல் அலுவலர் திரு.ஆறுமுகம், விக்கிரவாண்டி வட்டாட்சியர் திரு.பார்த்திபன், மாவட்ட வழங்கல் அலுவலரின் நேர்முக உதவியாளர் திரு.மனோகரன் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.